www.tamilarangam.net

184

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# இந்தியாவுடன் யுத்தம் ஏன்?




நன்றி: ஈழநாதம்-1990

# அன்ரன் பாலசிங்கம் வெளியிட்ட தகவல்கள்

இந்தியப் படை வெளியேறியதையும், அன்னை பூபதியை நினைவு கூறுமுகமாகவும் நல்லூரில் எழுச்சி விழா ஒன்றை 21.04.1990ல் புலிகள் நடத்தினார்கள்.

யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னன் சங்கிலியனின் ராஜதானியான நல்லூரையே இந்தியப் படையை வெளியேற்றிய எழுச்சி நாளை கொண்டாட புலிகள் தெரிவு செய்திருந்தனர்.

அதன்பின்னர் யாழ் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்திலும் நல்லூரில்தான் பிரபாகரனது முக்கிய முகாமும் அமைந்திருந்தது.

நல்லூர் கூட்டத்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நீண்ட உரையொன்றை ஆற்றினார்.

இந்தியப் படையுடனான மாபெரும் யுத்தத்திற்கான புலிகளது விளக்கமாக அந்த உரை அமைந்திருந்தது.

அதன் காரணமாக அந்த உரையின் முக்கிய பகுதிகளை இங்கு தருகிறேன்.

புதிய தகவல்கள் பலவற்றை தனது உரையில் அன்ரன் பாலசிங்கம் வெளியிட்டார்.

"இந்திய ஆக்கிரமிப்புக்கும், அரசாங்கத்துக்கும், அட்டூழியங்களுக்கும் எதிராக தன்னுயிர் ஈந்த மகத்தான தியாகி அன்னை பூபதியை நினைவு கூறுமுகமாக எழுச்சியுடன் கூடியுள்ளோம்.

இந்த நினைவுகூறும் நிகழ்வில் இந்திய யுத்தத்தின் பின்னணியைப் பற்றிய உண்மை நிலையை விளக்க வேண்டியது, அவசியமானது.

**பல இடங்களில் இந்திய வெளிநாட்டலுவல் அமைச்சர், அதிகாரிகள், 'றோ' அமைப்பின் இயக்குநர் ஆகியோருடன் பேச்சு நடத்தியவன் நான் என்பதை சகலரும் அறிவீர்கள். நாம் சிக்கலான உறவைத்தான் அவர்களுடன் கொண்டிருந்தோம்.**

## இந்திய புலிகள் யுத்தம் ஏன்?

**இந்திய-புலிகள் யுத்தம் பற்றி ஒரு குழப்ப நிலை மக்களிடையே நிலவுகிறது. ஏன் மோதினார்கள்? தவிர்த்திருக்க முடியாதா? இந்த பேரழிவு ஏன்? என்று பல கேள்விகள் எழுந்துள்ளன.**

1983ம் ஆண்டு இனக் கலவரத்தை அடுத்து இந்தியா தமிழர் பிரச்சனையில் தலையிட்டது. இந்த தலையீடு இரண்டு வித பரிணாமத்துடன் இருந்தது. ஒன்று- ராஜ தந்திர அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் நடத்தினார்கள். இரண்டு- தமிழ் ஈழத்தில் இயங்கும் தமிழ் அமைப்புக்களுக்கு ஆயுதம் வழங்கி சிங்கள இராணுவத்துக்கு எதிராக யுத்தம் செய்யத் தூண்டினார்கள்.

**அன்று தம்பி பிரபா இந்தியாவிடம், "பல ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதம் வழங்க வேண்டாம். ஓர் இயக்கத்துக்கு ஆயுதம் வழங்கி அந்த இயக்கத்தை வளர்க்க வேண்டும். பல இயக்கங்களை வளர்ப்பதன் மூலம் இயக்க மோதல்கள் ஏற்பட்டு மக்கள் அழிய வேண்டி வரும்" என்று கூறி வந்தார்.**

இதை இந்தியா செவிமடுக்கவில்லை. தமிழீழத்தில் தனியாக ஓர் இயக்கத்தை பலம் வாய்ந்ததாக உருவாக்க இந்தியா விரும்பாததே அதற்கு காரணம்.

**மற்றைய இயக்கங்களுக்கு கூடுதல் உதவி வழங்குவதன் மூலம் புலிகளுடன் இயக்க மோதலைக் கொண்டுவந்து, புலிகளை அழித்துவிடலாம் என்று திட்டமிட்டு தமக்கு தலையாட்டும் இயக்கங்களை இந்தியா வளர்த்து வந்தது.**

தமிழீழம் சுதந்திரம் பெறுவதை அன்றிலிருந்து இன்றுவரை இந்தியா எதிர்த்து வருகிறது. தமது வல்லாதிக்கத்துக்கும், நாட்டுக்குள்ளும் இது பூகம்பத்தை ஏற்படுத்தும் என்ற சிந்தனையில் புலிகளுக்கும், அதன் இலட்சியமான தமிழீழத்துக்கும் எதிராகவே இந்திய அரசு செயல்பட்டு வந்திருக்கிறது.

பலம் வாய்ந்த இயக்கமாக புலிகள் வளர்ந்து வந்த நேரத்தில் 'றோ' மற்ற இயக்கங்களுக்கு கூடுதல் பயிற்சி அளித்து எம்முடன் மோத விட்டது. அதன் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்தி, அழித்து தலையாட்டும் பொம்மை இயக்கங்களை உருவாக்க முனைந்ததுதான் எமக்குள் ஏற்பட்ட இயக்க மோதல்கள். ஆனாலும் புலிகளின் இலட்சிய தாகம் அதைப்பலம் வாய்ந்த இயக்கமாக்கியது.

## இந்தியா வகுத்த சூழ்ச்சி திட்டம்

**இந்நிலையில் இந்தியா சதி செய்ய சூழ்ச்சித்திட்டம் தயாரித்தது. வடமராட்சி தாக்குதல் எப்போது, என்ன நேரம் மேற்கொள்ளப்படும் என்ற முழு விபரமும் 'றோ' அமைப்புக்குத் தெரியும். ஆனால் 'றோ' எமக்கு பொய்த் தகவல் தந்தது.**

"யாழ்-நகர் மீது ஸ்ரீலங்கா இராணுவம் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தப்போகிறது. உங்கள் வீரர்களை நகர்ப்பகுதிக்கு நகர்த்துங்கள்." என்று றோ கூறியது.

அதை நம்பிய நாம் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து எம் வீரர்களை யாழ் நகருக்கு நகர்த்தினோம். ஆனால் இதற்கு மாறாக வடமராட்சியை ஸ்ரீலங்கா அரசு தாக்கியபோது நாம் தோல்வியைத் தழுவ நேர்ந்தது.

**அந்த நேரத்தில் நான் இந்தியாவில் இருந்தேன். பிரபா யாழ்ப்பாணத்தில் இருந்து எனக்குத் தகவல் தந்தார். "ஆயுதங்கள் அவசரம் வேண்டும். இந்தியாவிடம் பெற்று உடன் அனுப்புங்கள்," என்று. ஆனால் ஆயுதம்தர இந்தியா முன்வரவில்லை.**

இந்த நிலையை வைத்து "புலிகள் தமிழ் மக்களைக் காப்பாற்றமாட்டார்கள். வடமராட்சி போல் எல்லாப் பகுதியிலும் நடக்கப் போகிறது" என்று இந்தியாவும் 'றோ'வும் பிரசாரம் செய்ய ஆரம்பித்தன.

இறுதியில் இலங்கையுடன் இந்தியா ஒப்பந்தம் செய்தது. அத்துடன் இராணுவமும் வந்தது.

**எம் கருத்து கவனிக்கப்படாமல் இலங்கை- இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது. அச்சமயம் பிரபாவையும், என்னையும், யோகி, திலீபன் ஆகியோரையும் ஏமாற்றி டில்லிக்கு அழைத்துச் சென்று "கறுப்புப் பூனை" காவலில் வைத்தார்கள்.**

இந்நிலையில் ஒப்பந்தத்தைப் பற்றி மிரட்டிக்கூறி ஒப்பந்தத்தில் கையெழுத்து வைக்கும்படி கேட்டார்கள்.

இந்தியத் தூதர் டிக்ஸிற் வெளிவிவகார அமைச்சர், 'றோ' அதிகாரிகள் ஒப்பந்தத்தை வாசித்துக்காட்டி ஒருமணி நேரத்தில் ஏற்க வேண்டும் என்றனர். "ராஜீவ் காந்தி ஒப்பந்தத்தில் கையெழுத்துப்போட இலங்கை போகிறார்" என்றும் கூறினார்கள்.

**40 ஆண்டுகால சிக்கலான வீர வரலாற்றுடன் போராடிய தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை நிர்ணயிக்கும் ஒப்பந்தத்தை ஒருமணியில் தரவேண்டுமா? என்று அவர்களிடம் பிரபா கேட்டார். சாட்டுக்காக அவசரமாக வாசித்தோம்.**

"ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனையான, 72 மணிநேரத்தில் எமது இராணுவத்தைக் கலைத்து ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும். என்பதை ஏற்கமுடியாது" என்றோம்.

தியாகத்தின் அடிப்படையில் வளர்ந்த இயக்கம், எப்படி உப்புச்சப்பற்ற மாகாண சபையை ஏற்பது? என்று கேட்டோம்.

**பிரபா இந்த ஒப்பந்தத்தை ஏற்க முடியாது என்று உறுதியாகக் கூறிவிட்டார். "நீங்கள் ஏற்காதுவிட்டால் ஆறு மாதம் என்ன, ஆறு வருடங்கள் இங்கு தங்கவேண்டி வரும்" என்று மிரட்டினார்கள். "என்னைக் கொன்றாலும் சரி மக்கள் நலன் பாதிக்கும் ஒப்பந்தத்தை ஏற்கமாட்டேன்" என்று பிரபா கூறினார்.**

## இதுதானா பரிசு?

பிரபாவின் நெருங்கிய நண்பரும், பல உதவிகளை வழங்கியவருமான தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். சுகவீனமாக இருந்தபோதும் அவரை அவசர அவசரமாக சென்னையில் இருந்து அழைத்துவந்து எம்முடன் பேச விட்டனர்.

**அவரிடம் பிரபா, "எப்படி அண்ணா இதை ஏற்பது? தமிழர் நலனில் அக்கறை கொண்டு இதை ஏற்கமுடியாத நிலையில் உள்ளோம்" என்று தெரிவித்தார்.**

**"எந்த முடிவைத் தம்பி எடுக்கிறாயோ அந்த முடிவை நான் ஆதரிப்பேன். உனது முடிவுதான் எனது முடிவும்" என்று எம்.ஜி.ஆர். கூறினார்.**

பின்னர் ராஜீவ் காந்தியிடம் நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். ராஜீவ் பிரபாவைக் கட்டி அணைத்து "மாபெரும் வீரன்" என்று கூறி மகிழ்ச்சி தெரிவித்தார். பின் ஒப்பந்தம் பற்றி பேசியபோது பிரபா- "நான் ஒப்பந்தத்தை ஏற்க முடியாது அந்த ஒப்பந்தத்தில் பல குறைபாடுகளும், பலவீனங்களும் உள்ளன. 40 ஆண்டுப் போராட்டத்தில் 15 வருடங்கள் இரத்தம் சிந்தி எம்மக்கள் போராடியதற்கு இதுதானா பரிசு?" என்று கேட்டார்.




**"எப்படியாவது மாகாண சபையை ஏற்றுக்கொள்ளுங்கள் சமாதான முயற்சிகள் மேற்கொண்டு கூடுதல் அதிகாரம் பெற்றுத் தருகிறேன். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டாம். சிங்கள மக்களுக்கு கடைசிச் சந்தர்ப்பமாக இதை வழங்குவோம். உரிமை தராவிட்டால் தமிழீழத்துக்கு ஆதரவும் உதவியும் தருவேன்" என்று ராஜீவ் கூறினார்.**

"வல்லரசு ஆதரவும் எமக்கு தேவை என்ற காரணத்தால் பகைக்கக்கூடாது. என்று கருதி சில சமாதான முயற்சிக்கு ஒத்துழைக்கிறோம்" என்றோம்.

**"இடைக்கால அரசு ஒன்றை உருவாக்கித்தருகிறோம்.ஆயுதங்களை முழுமையாக ஒப்படைக்கத் தேவையில்லை. பழைய ஆயுதங்களை கொடுத்தால் போதும் இந்தியா உங்கள் பின்னால் நிற்கும்" என்று அவர் உறுதி அளித்ததையடுத்து தமிழீழம் திரும்பினோம்.**

சில ஆயுதங்களை ஒப்படைத்தோம். வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்று காத்திருந்தோம்.

இடைக்கால அரசு வரவில்லை. அதே நேரம் சிங்களக் குடியேற்றம் அதிகளவில் நடந்தது. சிங்களப் பொலிஸார் வந்தனர். இந்திய இராணுவம் குவிக்கப்பட்டது. அமைதிப்படையாக எல்லைப் புறக்காவலில் இந்தியப் படை ஈடுபடும் என்று இந்தியா முன்கூறியதற்கு மாறாக பெருந்தொகை இராணுவம் வந்து சேர்ந்தது.

## இந்தியா மீது சந்தேகம்

இதிலிருந்துதான் இந்தியாமீது எமக்கு சந்தேகம் எழுந்தது. எம் உரிமைகளைப் பெற்றுத்தர இவர்கள் முனையவில்லை. எம்மை முற்றாக அடக்கவே வந்துள்ளார்கள் என்பதை உணர்ந்தோம்.

**'அதேநேரம் மற்ற இயக்கங்களுக்கு 'றோ' பயிற்சி கொடுக்கிறது. எம்மை அழிக்க திட்டம் வகுக்கிறது' என்று நாம் இந்தியாவிடம் கூறியபோது இந்தியா அதை ஏற்கவில்லை.**

இதை ஆட்சேபித்தே திலீபன் உண்ணாவிரதம் மேற்கொண்டார். அச்சமயம் யாழ்ப்பாணம் வந்த இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்ஸிற்றை வந்து திலீபனுக்கு ஆறுதல் வார்த்தை கூறும்படி பிரபா கேட்டார். அவர் பிடிவாதத்தாலும், அகம்பாவத்தாலும் வரமறுத்தார். திலீபன் வீரமணம் அடைந்தான்.

**அத்துடன் எம் 17 போராளிகளின் கைது விடயத்திலும் இந்தியா மௌனம் சாதித்தது. கிளர்ச்சி வெடித்தது. இந்தியாவுடன் நாம் நேரடியாக மோதவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டோம். இந்தியா தன் நலனிலும், இலங்கையைத் தன் வல்லாதிக்கத்தில் கொண்டுவரவும் இராணுவ ரீதியில் புலிகளை அழிக்கவும்- கொண்டிருந்த திட்டம் அம்பலமானது.**

இரண்டு வருடமாகப் போர் நடந்தது. இந்தியாவை எவ்வகையிலும் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற அவசர தேவையின் நிமித்தம் ஜனாதிபதி எம்முடன் நிபந்தனையற்ற பேச்சுக்கு வந்தார். அரசியல், ராஜதந்திர அடிப்படையில் செயல்பட்ட இந்தியா அபகீர்த்தியுடன் புலிகள்- அரசு பேச்சுவார்த்தையுடன் வெளியேறியது.

உலக வரலாற்றில் வியட்நாம் போர் முதல் பல நாடுகளின் போர் எல்லாம் மற்றைய நாடுகளின் உதவியுடன் வெற்றி பெற்றன. எம்போர் எந்த நாட்டின் உதவியும் இன்றி போராளிகளின் கணக்கில் அடங்கா தியாகத்தாலும், மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாலும் இன்று வெற்றி பெற்றுள்ளது." என்று அன்ரன் பாலசிங்கம் தனது உரையில் கூறினார்.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்